## திராவிடர் கழகத்தின் வேலைத் திட்டங்கள் – தொடர் பரப்புரைகள்!

# மது - சினிமா - கைபேசி - சாதி - பதவி எனும் 5 போதைகள் ஒழிப்புத் திட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவிப்பு!



சென்னை, ஜூலை. 18-

மக்களிடம் பரவிக் கிடக்கும் ஜாதி மதப் போதை, மதுப் போதை, சினிமாப் போதை, கைப்பேசிப் போதை, பதவிப் போதைகளை ஒழிப்பதை வேலைத் திட்டமாகக் கொண்டு, திராவிடர் கழகம் பாடுபடும் - பிரச்சாரம் செய்யும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

போதை ஒழிப்புப் பிரச்சாரமும், தடுப்பு நடவடிக்கைகளும் மிகமிக இன்றியமையாத காலத்தின் முக்கியத் தேவைகளாக இருக்கின்றன!

### ஆட்சியாளர்களுக்கு அறைகூவலாக இருக்கும் போதைகள்!

சென்ற ஆட்சியானாலும், இன்றைய ஆட்சியானாலும் ஆளுவோருக்குப் பெரும் அறைகூவலாக இருப்பது இந்தப் போதையின் பரவல். அது அங்கிங்கெனாதபடி, வயதில் இளையவர்கள், மாணவர்களையும்கூட அவர்களது எதிர்காலத்தையே பலிபீடத்திற்குக் கொண்டு சென்று, அவர்களை மட்டுமல்லாமல், அவர்களை வளர்க்கும் பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, கல்விப் பயிர் வளர்க்க உழைக்கும் ஆசிரியர்கள் தொடங்கி, சட்டம் - ஒழுங்கைப் பராமரித்து, பாதுகாக்கும் கடமையாற்றும் காவல்துறையினருக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும்கூட பெரும் கவலை தரும், பொறுப்பு நீங்கா தலையாய கேள்விக் குறியாகின்றது!

### போதை, வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல!

இதனை வெறும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாக - ஆட்சியாளர் - காவல்துறை கருதக்கூடாது; அதையும் தாண்டி சமூகம் சார்ந்த ஒரு ‘கொள்ளை நோயாகவே’ கூர்ந்து கவனிக்கவேண்டும். இதனை ஒழிப்பது அவ்வளவு எளிதல்ல என்றாலும், மனிதகுல நல்வாழ்வை மிரட்டிய ‘கரோனா’ போன்ற பல லட்சக்கணக்கான உயிர்களைப் பறித்த நோயை ஒழிக்கப் பல மேம்பட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அம்மை, காலரா, பிளேக், சயரோகம் என்ற காசநோய் என்பவற்றைக்கூட ‘ஒழிக்க முடியாது’ என்று ஒரு காலத்தில் கருதப்பட்டன. மருத்துவ அறிவியலாளரது, ஆற்றல்மிகு ஆளுமைமூலம் அவற்றை ஒழித்து வெற்றி கண்டுள்ளோம்.

அதுபோலவே, புற்று நோய் என்பதையும் ஒழிப்பதற்குத் தீவிர ஆய்வுகளும், தீர்வுகளை நோக்கிய விடியல் பயணமும் வெற்றித் திசை நோக்கி வேக நடைபோடுகின்றன!

### விஞ்ஞானப் பார்வை தேவை!

போதை ஒழிப்பு என்பதற்குத் தற்போது பலரும் ஒரு குறுகிய கருத்தினையே பற்றிக்கொண்டு, அதற்காகவே மட்டும் பேசியும், எழுதியும், பரப்புரை செய்தும், சட்ட நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமுமாய்த் திகழுகிறார்கள்!

பகுத்தறிவாளர்களாக உள்ள பெரியாரிய கருத்தாளர்கள் அதனை விரிவான விஞ்ஞானப் பார்வையோடும் பார்த்து, மிகப்பெரிய இணை போதைகளாலும், சமூக, பொருளாதார, தனி மனித ஒழுக்கத்தை - நலத்தை - பொது ஒழுக்க நாசத்திற்கும் காரண காரியமாய் உள்ள மற்ற ஆபத்தான போதைகளையும் இணைத்து, அவற்றினை வேரோடும், வேரடி மண்ணுமாக ஒழித்திட ஓங்கிய பிரச்சாரத்தினை ஓய்வு ஒழிச்சலின்றி - எதிர்ப்புக்கு அஞ்சாமல் செய்து, தேவைப்படும்போது தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளும் உறுதி படைத்த ‘செயல் படை’ என்று பகுத்தறிவு, தன்மான, சமூகக் காப்பு அணி ஒன்றினை ஆயத்தப்படுத்த வேண்டிய அரிய தருணம் உள்ளது; இன்றேல், நாடு சுடுகாடு ஆகும்; மக்கள் மாக்கள் ஆவார்கள்.

மதுபோதை, கஞ்சா மற்றும் பல போதைகள் பயன்படுத்தியவர்களை மட்டும்தான் பாதிக்கும். அதிகபட்சம் அவர்தம் குடும்பக் கவலை கூடுதல் கவலையாகும்.

மற்ற நான்கு போதைகள் முந்தையவற்றைவிட, மிகப்பெரும் அளவிற்குச் சமூகத்தையே அழித்துவிடும். அருவருக்கத்தக்க போதைகளே மிக முக்கியம்!

### ஜாதி, மதப் போதைகள்!

ஜாதி போதை - நம் நாட்டையும் தாண்டி, அது அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற புலம்பெயர் ‘ஜாதி முகவர்கள்’ முயற்சியில், எப்படி கஞ்சா, அபின் விற்று லாபம் அடைந்து உலக மாஃபியா கும்பல் வலிமையாக உள்ளதோ, அதேபோல, ஜாதி, மதவெறி பரப்பும் கும்பலும் உலக நாடுகளில், நம் நாட்டிலிருந்து அங்குக் குடியேறி, அந்நாட்டு ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி, ஜாதி வெறியை மிக லாவகமாகப் பரப்பும் நிலை பரவலாகி வருகிறது! ஆணவக் கொலை முதல் அரசியல் கொலை வரை அதன் விளைவு என்பதை எவரே மறுக்க முடியும்?

அதற்கடுத்து மத போதை. மதங்களால், மனித குலம் பிளவுக்கும், பிரிவிற்கும் ஆளாகி, போர்களை அன்றும், இன்றும் நடத்துவதும், அதனால் அப்பாவி மக்கள், அந்த நாட்டிற்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லாத ஏழை, எளிய உழைக்கும் மக்களும், வர்க்கமும் கடும் விலை கொடுக்கவேண்டிய பேரபாயமாக போர் அபாயமும் இருக்கிறது.

முந்தைய சிலுவைப் போர் (Crusades) என்ற அய்ரோப்பிய மதப் போர் முதல், இப்போது நடக்கும் ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கப் போர் உள்பட அதன் மூல காரணம், மத வெறி, மதபோதை என்பதில் தொடங்கித்தானே அதிகாரப் போராக மாறியுள்ளது!

### சினிமா, தொலைப்பேசி, கிளப் - இவை பொழுது போக்கு மட்டுமே!

அதற்கடுத்து, சினிமா, கைப்பேசி (செல்போன்) குறிப்பாக இளைஞர்களிடம் இந்தப் போதை.

சினிமா, தொலைக்காட்சி, கிளப் இவை பொழுது போக்குக்குத் தேவைப்படலாம்; ஆனால், வாழ்நாள் பொழுதும் பார்ப்பவர்களை ஈர்த்துள்ளன அந்தப் போதைகள். அவைமூலம் பகுத்தறிவுள்ள மனிதர்கள், பிஞ்சு பருவத்திலிருந்து வயோதிக நிலை வரை - தங்களது ‘சுயத்தை’ பிறருக்கு அடகு வைத்துவிட்டு, ஆடை பறிபோன நிலைகூட அறியாமல், சுதந்திரத்தையும், தனித்தன்மையையும் இழந்தும் அதனை அறியாத வகையினராவது என்றால், அது போதையின் தன்மைதானே!

எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அமுதம் ஆனாலும் நஞ்சுதானே!

### பதவி என்னும் பெரும் போதை!

இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல இந்தத் தலைமுறையில் இன்றைய காலகட்டம் பதவிப் போதை!

எல்லா போதைகளையும் மிஞ்சிய போதை இந்தப் போதையாகும். தடுத்து, வெறுத்து, ஒதுக்கப்பட வேண்டிய பதவி, அதிகார போதையாகும்.

உடுக்கை இழந்தாலும், படுக்கை இழந்தாலும் எது பற்றியும் சற்றும் கூச்சம், வெட்கம், மானம் மறந்த, துறந்த அருவருப்பின் உச்சம் அது!

“மலம் எடுப்பவனுக்கு அதன் கெட்ட வாடை தெரியாது” என்ற தந்தை பெரியார் மொழிக்கேற்ப, பதவிக் களத்தில் புரளுகின்ற பதவிப் போதையாளர்களுக்குத் தங்களது நிர்வாண அசிங்கங்கள் புலப்படுவதே இல்லை.

இதனால், மனிதர்கள் புதுப்புது அரசியல் அவதாரங்கள் எடுக்க சந்தர்ப்ப அரிதாரங்களைப் பூசி, பாமர மக்களை ‘ஜனநாயகம்’ என்ற முகமூடி போட்டு, சமூக, மக்களின் நலன்களை நாளும் அழித்து வருகின்றனர்.

எனவே, இந்த அய்ம்பெரும் போதை ஒழிப்பைத் திராவிடர் கழகம் தனது வேலைத் திட்டமாக - தொடர் பிரச்சாரத்தினை முதற்கட்டமாக நடத்திட திட்டமிட்டு வருகிறது.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.



கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ராக்கம்பாளையம் கிராமம் மறைந்த முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மெய்யழகன் அவர்களின் திருஉருவப்படத்தை தலைமை செயற்குழு உறுப்பனரும், முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் மு. மணிபாலன், எம்.எல்.ரவி, இரா.அறிவழகன், மு.பாஸ்கரன், டி.ஜெ.தமிழரசன், எம்.கேசவன், எஸ்.ராமஜெயம், எம்.ஜெயசந்திரன், கே.இ.திருமலை, என்.எஸ்.மூர்த்தி, அப்துல்கரீம், வேதாசலம், புருஷோத்தமன், எம்.ரவி, நத்தம்.ஜெயராமன், கே.ஜி.நமச்சிவாயம், முனிவேல், என்.சாகவேதன், கே.வி.நாகராஜ், கே.வி.ரவி, ரெட்டம்பேடு.செந்தில், ஜெ.என்.எஸ்.பாண்டியன், இளவரசன், அறிவழகன், நரேந்திரன், வா.வாசு, ஆராப்பு. பாபு, தமிழ்பிரியன், அமுல்ராஜ், ஏ.ஜெயகோபி மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் த.வெ.க. ஆட்சியில் தலைவிரித்தாடும் குட்கா – கஞ்சா விற்பனை!

# சில்லறை வியாபாரிகள் கைது மட்டும் போதுமா?

## பின்னணியில் உள்ள ‘முக்கிய புள்ளிகள்’ மீது எப்போது நடவடிக்கை?

திருவள்ளூர், ஜூலை 18-

திருவள்ளூர் மாவட்டத்தில் கஞ்சா, போதை மாத்திரைகள் மற்றும் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைப் பொருட்கள் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது, த.வெ.க. ஆட்சியின் சட்டம்-ஒழுங்கு மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மீது கடும் கேள்விக்குறியை எழுப்பியுள்ளது. காவல்துறையினர் தொடர்ந்து கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், போதைப் பொருள் விற்பனை எந்த விதத்திலும் குறையாத நிலை தொடர்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மாவட்டம் முழுவதும் கஞ்சா, போதை மாத்திரைகள் மற்றும் குட்கா விற்பனை குறித்து தொடர்ந்து புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, காவல்துறையினர் தீவிர வாகன சோதனை மற்றும் கடைகளில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, திருத்தணி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டதாக மகேஷ் மற்றும் விக்ரம் ஆகிய இருவரை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து 20 கிராம் கஞ்சா மற்றும் 150 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தனர். பின்னர் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

அதேபோல், சிப்காட் பகுதியில் குட்கா விற்பனையில் ஈடுபட்டதாக சிவகுமார், கும்மிடிப்பூண்டி பகுதியில் பிரதீப்குமார், ஆரம்பாக்கம் பகுதியில் சென்னையைச் சேர்ந்த அமீர் அலி, கவரப்பேட்டை பகுதியில் தர்மா ஆகிய நான்கு பேரை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து மொத்தம் 107 கிலோ 200 கிராம் குட்கா புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

இதன் மூலம் நேற்று ஒரே நாளில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக 2 பேரும், குட்கா விற்பனையில் ஈடுபட்டதாக 4 பேரும் என மொத்தம் 6 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

ஆனால், கைது நடவடிக்கைகள் தொடர்ந்தும் போதைப்பொருள் மற்றும் குட்கா விற்பனை குறைந்ததாக எந்த அறிகுறியும் இல்லாதது பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சில்லறை விற்பனையாளர்கள் கைது செய்யப்படுகின்றனர்; ஆனால் அவர்களுக்கு பொருட்களை சப்ளை செய்யும் மொத்த விற்பனையாளர்கள், கடத்தல் கும்பல்கள் மற்றும் பின்னணியில் செயல்படும் முக்கிய நபர்கள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வலுத்து வருகிறது.

“போதை இல்லா தமிழகம்” என்ற வாக்குறுதிகள் வெறும் முழக்கங்களாகவே மாறிவிட்டதா? என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் எழுப்புகின்றன. த.வெ.க. ஆட்சியில் திருவள்ளூர் மாவட்டம் உட்பட பல பகுதிகளில் குட்கா மற்றும் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்து வருவது அரசின் நிர்வாகத் தோல்வியை வெளிப்படுத்துவதாகவும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

எனவே, சில்லறை விற்பனையாளர்களை கைது செய்வதோடு நிற்காமல், இந்த போதை வலையமைப்பின் ஆணிவேராக இருக்கும் மொத்த விற்பனையாளர்கள், கடத்தல் கும்பல்கள் மற்றும் அவர்களுக்கு துணைபுரியும் நபர்களை கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

# ஒதியத்தூரில் அம்பேத்கர் சிலையை திறக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!



சேலம், ஜூலை.18-


இந்திய குடியரசு கட்சியின் சார்பில் சேலம் மண்டல செயலாளர் பழனிச்சாமி தலைமையில் கெங்கவல்லி ஒன்றியம் ஒதித்தூரில் அம்பேத்காரின் சிலையை திறக்க வலியுறுத்தியும் தலித் மக்கள் 15 பேர் மீது பொய் வழக்கு போட்டதாக கூறியும். முதலமைச்சர் தலையிட்டு அதனை ரத்து செய்வதுடன் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் மங்கா பிள்ளை, பொருளாளர் கவுரி சங்கர், மாநில துணை தலைவர் பாலகிருஷ்ணன், மாநில பொறுப்பாளர்கள் வணங்காமுடி, செட்டி மணி ஆகியோர் ‘ கருத்துரை வழங்கினர்.

## இரா.கிரிராஜன் எம்.பி. – கோ.காமராஜ் பங்கேற்பு:

# மாதவரம் 30(அ) வட்டம் ஆர்.நாராயணன் படத்திறப்பு நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் எஸ்,சுதர்சனம் படத்தை திறந்து வைக்கிறார்!



சென்னை, ஜூன் 18

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30 (அ) வட்டத்தின் மூத்த முன்னோடி ஆர். நாராயணன் வயது 82 அவர்களின் திருஉருவப் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (18.7.2026 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கல்பாளையம் பெருமாள் கோவில் தெருவில் நடைபெறுகிறது.

அவரது திருஉருவப் படத்தை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

நிகழ்ச்சியில் இரா. கிரிராஜன் எம்.பி.. தாம்பரம் நகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், மாதவரம் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், பகுதி செயலாளர் ஜி.துக்காராம், புத்தாகரம் ஏழுமலை, டி.சுந்தரம், எம். சரவணன், மு.குட்டி, மோகன், திருமலை ஜி.துரைசாமி, துரை ஸ்ரீராமுலு, டி.கே.வினோத்குமார், மாமன்ற உறுப்பினர்கள் குட்டி மோகன், குணசுந்தரி, ரமணி மாதவன் மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.என்.கோதண்டன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் ஜி பார்த்தசாரதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.லட்சுமி காந்தன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# ஊராட்சி வாரியாக பொதுஉறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூலை. 18-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.கவில் அடங்கியுள்ள கீழ்க்கண்ட ஊராட்சிகளில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்திட உள்ளனர். எனவே, இக்கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் தேதி, ஊராட்சி விவரம் வருமாறு:-

19.7.2026 ஞாயிறு - காலை 9.30 மணி - மலைப்பட்டு, காலை 10.30 மணி - சேத்துப்பட்டு, காலை 11.30 மணி - மணிமங்கலம், மாலை 4.00 மணி - சாலமங்கலம், மாலை 5.00 மணி படப்பையிலும்,

25.7.2026 சனி - மாலை 4.00 மணி - கரசங்கால், மாலை 5.00 மணி ஒரத்தூர், மாலை 6.00 மணி காவனூரிலும்,

26.7.2026 ஞாயிறு - காலை 9.30 மணி - ஆதனூர், காலை 11 மணி - மாடம்பாக்கம், மாலை 4.00 மணி - செரப்பணஞ்சேரி, மாலை 5 மணி - வைம்பூரிலும்,

1.8.2026 சனி - காலை 9.30 மணி - நாட்டரசன்பட்டு, காலை 10.30 மணி - வட்டம்பாக்கம், காலை 11.30 மணி - வளையக்கரணை - மாலை 4.00 மணி - வடக்குப் பட்டு, மாலை 5 மணி - எழுச்சூர், மாலை 6 மணி - செனன்குப்பத்திலும் கூட்டங்கள் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 வட்டம் 38 பட்டேல் நகர் சிறுவர் விளையாட்டு மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 8 வடிவிலான நடை பயிற்சி மேடை, விளையாட்டு உபகரணங்களை நேரில் சென்று மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், பொறியாளர் ஸ்ரீதர் உடன் ஆய்வு செய்தார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, 53 வது வார்டு, மண்டலம் 05 பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற கூட்டத்தில் பேசியதின் வாயிலாக மின்ட் பூங்காவின் உள்ளே சிறுவர்கள் சறுக்கு விளையாட்டு ஸ்கேட்டிங் கட்டும் பணிகளை மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கண்ணி நேரில் பார்வையிட்டடு ஆய்வு செய்தார். உடன் மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5 அதிகாரிகள் இருந்தனர்.